www.agaram.lk



தரம் 11

# மூன்றாம் தவணைப் பரீட்சை ~ 2017

## வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும் - I, II

சேர்விலக்கம் : நேரம் : 3 மணித்தியாலம்

◆ பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 - 3 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.

வணிகங்களின் முன்னேற்றமானது கட்டம் கட்டமாக நிகழ்ந்த ஒன்றாகும். மனிதர்களின் பலதரப்பட்ட தேவை, விருப்பங்களின் அதிகரிப்பே இம்மாற்றத்திற்கு காரணமாகும். இவற்றை நிறைவு செய்வதற்காகவே வணிகங்கள் தோற்றம் பெற்றன. வணிகங்களின் தோற்றம் மனிதர்களின் பல்வேறு விருப்பங்களின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்ததுள்ளது.

01. வணிகத்தின் ஆரம்பக் கட்டமாக குறிப்பிடக் கூடியது
1. பண்டமாற்று
2. சுயதேவை பூர்த்தி முறை
3. பணப்பாவனை
4. இலத்திரனியல் பணப்பாவனை

02. வணிகம் என்பதை விளக்குவதற்கு மிகவும் பொருத்தமான கூற்று
1. தேவைகளை நிறைவு செய்பவை வணிகங்களாகும்.
2. தேவை விருப்பங்களை நிறைவு செய்ய பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்பவை வணிகங்களாகும்.
3. விருப்பங்களை தோற்றுவிப்பவை வணிகங்களாகும்.
4. இலாப நோக்கில் செயற்படுபவை வணிகங்களாகும்.

03. 'பூகோள கிராமம் என்பது'
1. உலகிலுள்ள கிராமமங்களாகும்
2. இலத்திரனியல் செயற்பாடுகளின் வளர்ச்சி காரணமாக முழு உலகமும் கிராமமாக மாறியுள்ளமை.
3. இலத்திரனியல் ஊடக பாவனை செய்யும் கிராமமாகும்
4. அமெரிக்கா நாட்டிலுள்ள கிராமங்களாகும்

04. தேவைகளின் பண்புகளில் ஒன்றாக குறிப்பிட முடியாதது
1. அத்தியவசியமானவை
2. தோற்றுவிக்க முடியாதவை
3. வரையறுக்கப்பட்டவை
4. பலவகைப்பட்டவை

05. உற்பத்திக் காரணிகளை ஒழுங்கமைத்து உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்பவர்
1. உரிமையாளர்
2. முயற்சியாளர்
3. உற்பத்தியாளர்
4. முகாமையாளர்

06. வழங்கப்பட்ட கடன்களை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ள மேலும் புதிய கடன்களை வழங்க வணிகத்தில் அக்கறை செலுத்துவோர்
1. உரிமையாளராவார்
2. வழங்குனராவார்
3. போட்டியாளராவார்
4. முகாமையாளராவார்

07. இலாப நோக்கற்ற, அரச துறை சார்ந்த சட்ட ஆளுமையற்ற வணிகமொன்றாக கருதத்தக்கது
1. திணைக்களம்
2. கூட்டுறவு
3. கூட்டுத்தாபனம்
4. சங்கங்கள்

08. நாளை தொடக்கம் பெற்றோலியப் பொருட்களின் விலைகள் 10% ஆல் அதிகரிக்கப்படும் என பொதுசன ஊடகங்களில் அறிவிக்கப்பட்டது. <u>இதனால் பெற்றோலிய பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு</u> ஏற்பட்டது. மேலே கோடிடப்பட்ட சொற்களினால் காட்டப்பட்டுள்ளது. தாக்கம் எத்தொடர்பாடல் செயன்முறைகளின் விளைவாகும்?
1. செய்தியின் விளைவாகும்
2. மீளவலியுறுத்தலின் விளைவாகும்
3. துலங்கலின் விளைவாகும்
4. ஊடகத்தின் விளைவாகும்

09. முகாமைத்துவ கருமம் ஒன்றாகக் குறிப்பிட முடியாதது?
1. திட்டமிடல்
2. நெறிப்படுத்தல்
3. தீர்மானித்தல்
4. கட்டுப்படுத்தல்

10. கொள்வனவு செய்யப்படுகின்ற 1kg பால் பொதிக்கு பால்மா பொதியொன்றுக்கு 100g பால்மா பொதியொன்றை மேலதிகமாக பெற்றுக்கொள்ள முடியும். சந்தைப்படுத்தல் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு இச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் கலவை மாறி எது
1. மேம்படுத்தல்
2. விலையிடல்
3. உற்பத்தி பொருள்
4. இடம்

11. மக்கள் வங்கியினால் விநியோகிக்கப்படும் ரெலர் இயந்திர அட்டையின் பெயர்
1. SET
2. CEY NET
3. PET
4. SMART

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

12. சிறப்பு சந்தை எனப்படுவது
   1. நிலையான சிற்றளவு வியாபாரம் ஒன்றாகும்
   2. நடமாடும் சிற்றளவு வியாபாரமொன்றாகும்
   3. நிலையான பாரியளவு சில்லறை வியாபாரமொன்றாகும்
   4. மொத்த வியாபாரமொன்றாகும்

13. க.பொ.த (சா.த) பெறுபேற்றினை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு பாடத்திற்குமான மேலதிக வகுப்புகளை நடாத்துவதற்காக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதுடன் இந்த ஆசிரியர்களுக்கு ஆலோசனை மற்றும் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. இவ்வகுப்புகளை சரியாக நடாத்துவதற்கு தேவையான ஆலோசனைகளை ஆசிரியர்களுக்கு வழங்க ஆசிரியர்கள் சிலர் நியமிக்கப்பட்டனர். இவர்கள் பாட ஆசிரியர்களுக்கு தேவையான ஊக்குவிப்புகளையும் ஆலோசனைகளைவும் வழங்கு வருகின்றனர். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ பக்க
   1. திட்டமிடல், ஒழுங்கமைத்தல, நெறிப்படுத்தல்
   2. திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல்
   3. திட்டமிடல், தீர்மானித்தல், ஒழுங்கமைத்தல்
   4. திட்டமிடல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல்

14. உற்பத்தி பொருள் நுகர்வோருக்கு விநியோகிக்கப்படுகின்ற முறையொன்று கீழே தரப்பட்டுள்ளது.

இது ஒரு

| உற்பத்தியாளர் ⟶ நுகர்வோர் |
|---|

   1. இடை நடுவர் மூலமான விநியோகமாகும்
   2. நேரடி விநியோகமாகும்
   3. மறை முக விநியோகமாகும்
   4. சில்லறை வியாபாரி மூலமான விநியோகமாகும்

15. முதலீட்டு வழியொன்றை தெரிவு செய்யும் போது கவனத்திற் கொள்ள தேவையற்ற விடயம்
   1. முதலீட்டின் நோக்கம்
   2. இடரின் தன்மை
   3. முதலீட்டின் நன்மைகள்
   4. ஏனைய முதலீட்டின் நன்மைகள்

16. பங்குச் சந்தை என்பதை சரியாக விளக்கும் கூற்று
   1. சகல கம்பெனி பங்குகளும் இங்கு விற்பனை செய்யப்படும்
   2. விலை கூறப்பட்ட கம்பெனி பங்குகள் இங்கு விற்பனை செய்யப்படும்
   3. தனிக்கம்பெனியின் பங்குகள் இங்கு விற்பனை செய்யப்படும்
   4. அரச கம்பெனி பங்குகள் இங்கு விற்பனை செய்யப்படும்

17. கொடுக்கல் வாங்கலொன்று கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் கீழே தரப்பட்டுள்ளது

| சொத்துகள் (ரூபா) | = | உரிமை (ரூபா) | + | பொறுப்பு (ரூபா) |
|---|---|---|---|---|
| | | +20 000 | | -20000 |

மேலே தரப்பட்டுள்ள சமன்பாட்டில் தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்
   1. நிறுவனத்தின் கடன் ரூபா 20000 உரிமையாளரினால் தீர்க்கப்பட்டது
   2. உரிமையாளரின் கடன் ரூபா 20000 நிறுவனத்தால் தீர்க்கப்பட்டது
   3. உரிமையாளரை தனது சொந்த தேவைக்கு பற்றிய தொகை 20000
   4. செலுத்திய செலவுகள் 20000

18. கொடுக்கல் வாங்கலொன்றை பதிவு செய்யும் இரட்டைப்பதிவு கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| சென்மதியாளர் கணக்கு | வரவு | ரூ 25000 |
| காசுக் கணக்கு | செலவு | ரூ 25000 |

இங்கு நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்
   1. கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட சரக்குகள் 25000
   2. கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட சரக்குகள் 25000
   3. காசுக்கு விற்பனை செய்யப்பட்ட சரக்குகள் 25000
   4. சென்மதியாளருக்கு செலுத்திய காசு 25000

19. பின்வருவனவற்றுள் மூல ஏடொன்றாக குறிப்பிட முடியாதது
   1. காசேடு
   2. சம்பளக் கணக்கு
   3. சில்லறை காசேடு
   4. விற்பனை நாட்குறிப்பு

20. காசேட்டுடன் தொடர்புபட்ட மூல ஆவணங்களை மட்டும் கொண்ட தொகுதி எது
   1. வைப்புச் சீட்டு, வங்கிக் கூற்று
   2. பற்றுச்சீட்டு, கொடுப்பனவு கைச்சாத்து
   3. பட்டியல், பற்றுச்சீட்டு
   4. பட்டியல், வைப்புச் சீட்டு

21. காசுக் கொடுப்பனவுக்குரிய உதாரணமொன்றாக குறிப்பிட முடியாதது
   1. பெற்ற வட்டி
   2. கடன் கொடுனருக்கு செலுத்திய காசு
   3. காசு கொள்வனவு
   4. மீளச் செலுத்திய கடன்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

22. சீரஞ்சீவி நிறுவனம் ரூபா 20000 பொருட்களை 10% கழிவுடன் கருணாவுக்கு கடனுக்கு விற்பனை செய்தது கருணா கடனை மீள செலுத்தும் போது 5% கழிவு அனுமதிக்கப்பட்டது. இங்கு வழங்கப்பட்ட வியாபாரக் கழிவு மற்றும் காசுக் கழிவு என்பன முறையே
1. ரூபா 2000, ரூபா 1000
2. ரூபா 2000, ரூபா 1800
3. ரூபா 2000, ரூபா 900
4. ரூபா 2000, ரூபா 2000

23. 2017. 02.01 கஜபா வணிகத்தில் காணப்பட்ட சில்லறைக் காசு மீதி ரூபா 150 ஆகும். 2017 பெப்ரவரி மாதத்திலிருந்து சில்லறை காசு வசக்கட்டின் பெறுமதி ரூபா 500 ஆல் அதிகரிக்கப்பட்டு ரூபா 2850 அம்மாதத்திற்கு வழங்கப்பட்டது. ஜனவரி மாதத்தில் காணப்பட்ட சில்லறை காசு வசக்கட்டின் பெறுமதி யாது?
1. ரூபா 2500 2. ரூபா 2000 3. ரூபா 1500 4. ரூபா 3000

24. சில்லறை காசேட்டு செலவுப் பகுப்பாய்வு நிரல்களை பேரேட்டுக்கு மாற்றுவற்குரிய இரட்டை பதிவு
1. காசுக் கணக்கு வரவு, குறித்த செலவுக் கணக்கு செலவு
2. குறித்த செலவுக் கணக்கு வரவு, காசுக் கணக்கு செலவு
3. குறித்த செலவுக் கணக்கு வரவு, சில்லறை காசுக்கணக்கு செலவு
4. சில்லறை காசுக்கணக்கு வரவு, குறித்த செலவுக் கணக்கு செலவு

சதாத் வணிகத்தின் 2016 டிசம்பர் மாத வங்கிக்கணக்கு மீதி ரூபா 30,700 ஆகும். அம்மாத வங்கிக்கூற்று மீதி வேறோர் மீதியைக் காட்டியது. அதற்கான காரணங்கள் பின்வருமாறு
A - தீர்வையாகாத காசோலையின் ரூபா 4850
B - வங்கி அறவிட்ட வங்கிக்கட்டணம் ரூபா 1200
C - கடன்பட்டோரின் நேரடி வைப்பு ரூபா 3300

25. செம்மையாக்கிய காசேட்டில் செய்ய வேண்டிய சீராக்கங்கள் எவை?
1. A யும் B யுமாகும் 2. B யும் C யுமாகும் 3. A யும் C யுமாகும் 4. A,B,C சகலதுமாகும்

26. வங்கிகணக்கிணக்கக் கூற்றில் செய்ய வேண்டிய சீராக்கங்கள்
1. A மாத்திரமாகும் 2. C மாத்திரமாகும் 3. A யும் C யுமாகும் 4. B யும் C யுமாகும்

27. திருத்திய காசேட்டு மீதி எவ்வளவு
1. ரூபா 31900 2. ரூபா 34200 3. ரூபா 35500 4. ரூபா 32800

28. வணிகமொன்றில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்கள் நிரலிலும் அதனுடன் சம்பந்தப்பட்ட மூல ஆவணங்கள் நிரலிலும் தரப்பட்டுள்ளது.

| X | Y |
|---|---|
| 1. ரூபனிடம் கொள்வனவு செய்த தளபாடங்கள் ரூபா 30000 | A. பட்டியல் |
| 2. காசு விற்பனை ரூபா 7000 | B. கைச்சாத்து |
| 3. பிர்தௌஸுக்கு விற்பனை செய்த சரக்கு ரூபா 3500. | C. நாட்குறிப்பு கைச்சாத்து |
| 4. காசு கொள்வனவு ரூபா 6000 | D. பற்றுச்சீட்டு |

X நிரலில் உள்ளவற்றை Y நிரலுடன் பொருத்தும் போது மூல ஆவணங்களின் சரியான ஒழுங்குமுறையைக் காட்டும் விடை
1. B,C,A,D 2. C,D,A,B 3. C,D,B,A 4. A,B,D,C

29. பரீட்சை மீதியில் செலவுப்பக்கம் கொண்டு செல்லப்படுகின்ற கணக்குத்தொகுதி எது?
1. மூலதனக் கணக்கு, பற்றுக் கணக்கு, விற்பனைக் கணக்கு
2. மூலதனக் கணக்கு, கடன்கொடுநர் கணக்கு, விற்பனைக் கணக்கு
3. கொள்வனவுக் கணக்கு, கடன்படுநர் கணக்கு, சம்பளக் கணக்கு
4. விற்பனைக் கணக்கு, வங்கிக்கடன் கணக்கு, பற்றுக் கணக்கு

30. பற்றுக் கணக்கு என்பது ஒரு
1. பொறுப்புக் கணக்காகும் 2. உரிமைக் கணக்காகும் 3. செலவுக் கணக்காகும் 4. வருமானக் கணக்காகும்

- சித்தார்த் வணிகத்தில் இடம்பெற்ற சில வழுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - அலுவலக உபகரணங்களின் கொள்வனவு ரூபா 18000
B - அலுவலக செலவுக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது
C - மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூபா 3000 மின்கட்டணக்கணக்கில் பதியப்படவில்லை
D - உரிமையாளர் பற்று ரூபா 5000 மூலதனக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது

31. மேற்குறிப்பிட்ட வழுக்களில் பரீட்சை மீதியில் வித்தியாசத்தை ஏற்படுத்தக்கூடிய வழுக்கள் எவை?
1. A யும் B யுமாகும் 2. B யும் C யுமாகும் 3. A யும் C யுமாகும் 4. B மாத்திரமாகும்

32. பரீட்சை மீதியில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாத வழு யாது?
1. A மாத்திரமாகும் 2. A யும் B யுமாகும் 3. C மாத்திரமாகும் 4. A,B,C சகலதுமாகும்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

33. வணிகமொன்றின் குறித்த நிதியாண்டில் உழைக்கப்பட்ட இலாபம் நட்டத்தைக் கணிக்க தயாரிக்கப்படும் கணக்கீட்டு அறிக்கை ..........(1).......... எனப்படுவதுடன், நிறுவனத்தின் குறித்த திகதியில் நிதி நிலைமைகளைக் காட்டுவதற்காக தயாரிக்கப்படும் அறிக்கை ..........(2).......... எனப்படும். மேலே உள்ள 1, 2 இடைவெளிக்கு வரக்கூடிய பொருத்தமான சொற்களைக் காட்டும் விடை யாது?
1. வருமானக் கூற்று, நிதிநிலைமைக் கூற்று
2. நிதிநிலைமைக் கூற்று, வருமானக் கூற்று
3. வருமானக் கூற்று, விற்பனைக் கிரயம்
4. நிதிநிலைமைக் கூற்று, விற்பனைக் கிரயம்

34. சிரச விளையாட்டு கழகத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை 150 பேராகும். அங்கத்தவர் ஒருவரின் மாதாந்த சந்தா ரூபா 100 ஆகும். 2016 ஆம் ஆண்டில் 20 பேர் அங்கத்துவ கட்டணம் செலுத்தவில்லை. 2016 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்படும் வருமான செலவுக் கணக்கில் சந்தா வருமானமாக காட்ட வேண்டிய தொகை என்ன?
1. ரூபா 15000 ஆகும்
2. ரூபா 13000 ஆகும்
3. ரூபா 180000 ஆகும்
4. ரூபா 156000 ஆகும்

35. ராஜ் தளபாட உற்பத்தி நிறுவனத்தின் 2016 ஆம் ஆண்டின் உற்பத்தி தொடர்பான சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- பலகை கொள்வனவு ரூபா 180,000
- ஆணி நிறப்பூச்சிகளின் கொள்வனவு ரூபா 7,000
- மேற்பார்வையாளரின் சம்பளம் ரூபா 45,000
- உற்பத்தியாளர் கூலி ரூபா 35,000
- ஏனைய நேர்செலவுகள் ரூபா 18,000

இந்த நிறுவனத்தின் மூலக்கிரயம், தொழிற்சாலை மேந்தலை ஆகியவற்றை காட்டும் விடை யாது?
01. ரூபா 240000, ரூபா 45000
02. ரூபா 233000, ரூபா 52000
03. ரூபா 233000, ரூபா 45000
04. ரூபா 233000, ரூபா 285000

பின்வரும் தகவல்களை பயன்படுத்தி 36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடை தருக.
கஜன் வணிகத்தின் 2016.12.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி

| | வரவு | செலவு |
|---|---|---|
| வாடகை | 18,000 | |
| 15% வங்கிக்கடன் | | 60,000 |
| சம்பளம் | 45,000 | |
| மோட்டார்வான் (கிரயம்) | 150,000 | |
| மோட்டார்வான் பெறுமானத்தேய்வு ஏற்பாடு (2016.01.01) | | 30,000 |
| உட்சுமை கூலி | 4,000 | |
| கழிவுகள் | 6,000 | 4,000 |
| கொள்வனவும் விற்பனையும் | 175,000 | 230,000 |
| மின்சாரம் | 14,000 | |
| 2016.01.01இல் சரக்கிருப்பு | 32,000 | |
| வங்கிக்கடன் வட்டி | 6,000 | |
| மூலதனம் | | 126,000 |
| | 450,000 | 450,000 |

மேலதிக தகவல்
01. 31.12.2016 இல் சரக்கிருப்பு ரூபா 28000
02. மோட்டார்வானுக்கு வருடாந்தம் கிரையத்தில் பெறுமானத்தேய்வு இடல் வேண்டும்.

36. கஜன் வணிகத்தின் 31.12.2016 ஆம் ஆண்டிற்கான விற்பனை கிரயம் எவ்வளவு
1. ரூபா 211000
2. ரூபா 183000
3. ரூபா 177000
4. ரூபா 187000

37. இவ் வணிகத்தின் நிதிச் செலவின் பெறுமதி
1. ரூபா 6000
2. ரூபா 7000
3. ரூபா 9000
4. ரூபா 15000

38. இவ் வணிகத்தின் 2016.12.31 இற்கான மொத்த இலாபம்
1. ரூபா 47000
2. ரூபா 59000
3. ரூபா 51000
4. ரூபா 55000

39. 31.12.2016 இல் உள்ளவாறான நடைமுறை சொத்துகளின் பெறுமதி
1. ரூபா 120000
2. ரூபா 90000
3. ரூபா 105000
4. ரூபா 80000

40. இந்த நிறுவனத்தின் 2016.12.31 இல் நிர்வாக செலவுகளின் மொத்தம்
1. ரூபா 77000
2. ரூபா 92000
3. ரூபா 21000
4. ரூபா 88000



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



தரம் 11

# மூன்றாம் தவணைப் பரீட்சை ~ 2017

## வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும் - II

- **முதலாம் வினா உட்பட பகுதி A இல் இரண்டு வினாக்களையும் பகுதி B இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**

(1) பின்வரும் நிகழ்வின் உதவியுடன் வினா இலக்கம் 1 முதல் 10 வரையான வினாக்களுக்கு விடை தருக.

சஞ்சீவன் ஒரு பிரபல ஆடை உற்பத்தி நிறுவனத்தின் உரிமையாளராவார். GSP+ வரிச்சலுகை ஐரோப்பிய சங்கத்தினால் அகற்றப்பட்ட பின்னர் அவரின் நிறுவனம் மூடப்பட்டது. மீண்டும் GSP+ வரிச்சலுகை கிடைக்கப் பெறுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையினால் அவர் மீண்டும் தனது நிறுவனத்தை 2017.01.01 இல் ஆரம்பித்தார். ஏற்கனவே அதற்கான இயந்திரங்கள், கட்டடங்கள் என்பன காணப்பட்டமையினால் அவற்றை பழுது பார்த்து உற்பத்திக்கு பயன்படுத்த திட்டமிட்டார். 2017.01.01 இல் காணப்பட்ட சொத்துகளின் பெறுமதி

புதிதாக ஈடுபடுத்திய காசு ரூபா 400,000
கட்டடம் ரூபா 500,000
இயந்திரங்கள் ரூபா 150,000
கட்டடங்கள் இயந்திரங்களை திருத்துவதற்கு ஏற்பட்ட செலவுகள் ரூபா 10,000

2017.01.10 தனது வணிகத்திற்கு "சஞ்சீவன் ஆடை தொழிற்சாலை" என பெயரிட்டார்.
2017.01.15 மக்கள் வங்கியிலிருந்து ரூபா 500,000 கடன் வட்டியில் பெற்றார்.
2017.01.18 துணிவகைகள், பொத்தான் போன்றவை கொள்வனவு காசுக்கு ரூபா 90000, கடனுக்கு ரூபா 50,000
2017.01.20 சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய ஊழியர்கள் 10 பேருக்கு வழங்கிய சம்பள முற்பணம் ரூபா 50,000
2017.01.21 இல் உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டன. அத்திகதியில் ஏற்பட்ட செலவுகள்
ஆரம்பிக்கும் செலவுகள் ரூபா 12,000
நன்கொடையாக கிடைத்த காசு ரூபா 25,000
2017.01.26 இல் ரூபா 1,500,000 பெறுமதியான விநியோக வாகனமொன்று குத்தகை அடிப்படையில் ரூபா 200,000 முற்பணம் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டது.
2017.01.30 இல் ஆடைகளின் விற்பனை ரூபா 180,000

i) அ) இவ் வணிகமானது எவ்வகையான அடிப்படை தேவையினை நிறைவு செய்கின்றது?
ஆ) இவ் வணிகத்தில் அக்கறை செலுத்தும் இரு பிரிவினர்களை குறிப்பிடுக?
ii) அ) இவ் வணிகமானது எவ் வகை வணிக அமைப்பைச் சார்ந்தது?
ஆ) உரிமை அடிப்படையில் வகைப்படுத்தும் போது எவ்வகை வணிகம் எத்துறையைச் சார்ந்தது?
iii) இவ் வணிகத்திற்குள்ள பலமொன்றையும் வாய்ப்பொன்றையும் தருக?
iv) இவ் வணிகத்தின் அகச் சூழல் காரணிகள் இரண்டையும் புறச் சூழல் காரணிகள் இரண்டையும் தருக?
v) 2017.01.01 இல் காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்களை பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் பெறுமதிகளுடன் பதிவு செய்து உரிமையாளரின் மூலதனத்தை கணிக்க?
vi) அ) இந்த நிறுவனத்தால் தயாரிக்கப்பட வேண்டிய இரு மூல ஏடுகளை தருக?
ஆ) மூல ஏடு என்றால் என்றால் என்ன என்பதனை குறிப்பிடுக?
vii) 2017.01.08 இல் கொடுக்கல் வாங்கலுக்குரிய இரட்டை பதிவினை தருக.
viii) நிறுவனமானது உற்பத்திக் கிரயத்தில் இலாபத்தினை வைத்து விற்பனை விலையினைத் தீர்மாவிக்குமாயின்
அ) 2017.01.14 இல் விற்பனை செய்த பொருட்களின் கிரையம் என்ன?
ஆ) இலாபம் எவ்வளவு?
viii) இந்த நிறுவனத்திலுள்ள நடைமுறை அல்லா சொத்துக்கள் இரண்டும், நடைமுறை அல்லா பொறுப்புக்கள் இரண்டும் தருக.
ix) இந்த நிறுவனத்தின் ஜனவரி மாதத்திற்கான காசேட்டினை தயாரித்து காசு மீதியினை கணிப்பிடுக?

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(2) i). தேவைகளின் இரு பண்புகளையும் விருப்பங்களின் இரு பண்புகளையும் தருக?

ii). பின்வரும் கூற்றுகள் உண்மை அல்லது பொய் என்பதனை குறிப்பிடுக?

அ) ஆசிரியர்கள் உடல் உழைப்பை பாடசாலைக்கு வழங்குவோராவர் (..........)

ஆ) வணிகத் திட்டத்தினை சரியான முறையில் செயற்படுத்துவது உரிமையாளரின் கடமையாகும் (..........)

இ) நாடொன்றின் சேமிப்பு அதிகரிக்கும் போது முதலீடு குறைவடையும் (..........)

ஈ) வணிக இடர்ளை ஏற்று புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்துபவர் முயற்சியாளராவார் (..........)

iii) இப்பாகமுவ குளத்தில் மீன் பிடிக்கும் மீனவர்கள் ஒன்றினைந்து தமது மீன்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்வதற்கு ஜனநாயக நிர்வாகம் கொண்ட வணிக அமைப்பொன்றை ஆரம்பிக்க எண்ணியுள்ளனர்

அ) மேற்குறிப்பிட்ட உற்பத்தியாளர்களுக்கு நீங்கள் முன்மொழியும் வணிக அமைப்பு எது?

ஆ) இந்த நிறுவனத்தின் அனுகூலங்கள் இரண்டு தருக?

iv) அலீம் தனது தோட்டத்திலுள்ள மண்ணை பயன்படுத்தி செங்கல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார். இதில் தொடர்புபட்டுள்ள இரு உற்பத்தி காரணிகளை இரண்டு உதாரணங்களுடன் தருக.

(3) i) அ) நடைமுறைக் கணக்கினை ஆரம்பிக்கும் நடைமுறையினை தருக.

ஆ) காசோலை ஒன்றுடன் சம்பந்தப்பட்ட இரு தரப்பினர்களை தருக.

ii) பின்வரும் கூற்றுகள் உண்மை அல்லது பொய் என்பதனை குறிப்பிடுக.

அ) நடைமுறை கணக்கினை பேணுபவர்களுக்கு மாத்திரமே வங்கி மேலதிகப் பற்றினை பெற்றுக் கொள்ள முடியும் (..........)

ஆ) இழப்பீட்டு தத்துவமானது ஆயுள் காப்புறுதி தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை (..........)

இ) பெறுபவருக்கு செய்தி உரிய முறையில் சென்றடையாவிடின் மாத்திரமே மீள வலியுறுத்தல் வழங்கப்படும் (..........)

ஈ) போக்குவரத்துக்குரிய கிரயமானது போக்குவரத்தின் அடிப்படை மூலமாகும் (..........)

iii). நமது நாட்டில் இருந்து தேயிலை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன், இந்தியாவிலிருந்து வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

அ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபார வகைகள் எவை?

ஆ) சில்லறை வியாபாரத்தின் இரு பண்புகளை தருக?

iv) நீர்வழிப் போக்குவரத்தின் இரு அனுகூலங்களையும் இரு பிரதிகூலங்களையும் தருக?

(4) i) அ) முகாமைத்துவம் என்றால் என்ன?

ஆ) முகாமைத்துவ செய்முறைகள் எவை?

ii) பின்வரும் கூற்றுகள் உண்மை அல்லது பொய் என்பதனை குறிப்பிடுக?

அ) வளங்கள் வரையறுக்கப்பட்டது. அவற்றில் இருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்ள முகாமைத்துவ செயற்பாடு அவசியமானதாகும். (..........)

ஆ) உலகிலுள்ள சகல நாடுகளுக்கும் பிரயாணம் செய்வதற்கு கடல் வழிப் போக்குவரத்தினை பயன்படுத்தலாம் (..........)

இ) நிலையான வைப்பின் மூலம் கிடைக்கும் வட்டியானது சேமிப்பு வைப்பின் மூலம் கிடைக்கும் வட்டியினை விட அதிகமாகும். (..........)

ஈ) சாதாரண பங்குகளை கொள்வனவு செய்வதன் மூலம் கம்பனியொன்றின் இயக்குனராக வரலாம். (..........)

iii) முதலீட்டு வழியொன்றை தெரிவு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய இரண்டு காரணிகளை தருக?

iv) சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதனால் கிடைக்கப்பெறும் இரண்டு நன்மைகளை தருக?

v) இலங்கை பிணைகள் பரிவர்த்தன ஆணைக்குழுவின் பிரதான நோக்கம் என்ன?

(5) i) அ) கணக்கீட்டின் அடிப்படை நோக்கம் யாது?

ஆ) சொத்துக்களில் காணப்படக் கூடிய இரு பண்புகளை தருக?

ii) சதாத் வணிகத்தின் 2017.01.01 இல் ஆரம்ப மீதிகளும் ஜனவரி மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் உமக்கு தரப்பட்டுள்ளன. அம்மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| அ) சரக்குகள் காசுக்கு கொள்வனவு | ரூபா 35,000 |
| ஆ) சிறாஜிடமிருந்து கொள்வனவு | ரூபா 15,000 |
| இ) காசோலை மூலம் செலுத்திய சம்பளம் | ரூபா 20,000 |
| ஈ) மீள செலுத்திய வங்கிக் கடன் | ரூபா 30,000 |
| உ) காசு விற்பனைகள் | ரூபா 40000 |



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

மேற்குறிப்பிடப்பட்ட மீதிகள் உட்பட கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் பதிவு செய்து 2017.01.31 இல் இறுதி மீதியை கணிக்க.

| | காசு(ரூ) | + வங்கி(ரூ) | + சரக்கிருப்பு(ரூ) | = உரிமை(ரூ) | + வங்கிக்கடன்(ரூ) |
|---|---|---|---|---|---|
| மீதி | 90000 | + 40000 | + 60000 | = 140000 | + 50000 |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

iii) பின்வரும் கணக்குகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.
அ) உரிமை கணக்கு ஆ) வருமானக் கணக்கு
இ) செலவுக் கணக்கு

(06) i) அ) மூல ஏடுகள் என்றால் என்ன?
ஆ) பின்வரும் கொடுக்கல் வாங்கலுக்குரிய மூல ஏட்டினை தருக?
1. சுதாகரிடம் இருந்து நிறுவன பாவனைக்காக கொள்வனவு செய்த மோடார் ரூபா 50000
2. காசுக்கு விற்பனை ரூபா 75000
3. குகனுக்கு விற்பனை ரூபா 40500
4. கடன் கொடுத்தோருக்கு செலுத்திய காசு ரூபா 15000

ii) அ) கழிவு என்றால் என்ன?
ஆ) கழிவுகளின் வகைப்படுத்தல்களை பாய்ச்சற் கோட்டு படத்தின் மூலம் காட்டுக?

iii) அ) வங்கிக் கூற்று மீதியும் காசேட்டின் வங்கி மீதியும் வேறுபடுவதற்கான நான்கு காரணங்களை தருக?
ஆ) குட்டான் வணிகத்தின் 2017 ஜனவரி மாதத்தின் வங்கிக்கணக்கு மீதியானது ரூபா 22700 இனை காட்டியது. எனினும் அம்மாதத்திற்கு கிடைத்த வங்கிக் கூற்று மீதியானது வேறொரு மீதியை காட்டியது. அதற்கான காரணங்கள் பினவருமாறு

- கடன்பட்டோனான தீன் நேராக குட்டானின் வங்கிக் கணக்கில் இட்ட தொகை ரூபா 7000
- வங்கி அறவிட்ட காசோலை புத்தக கட்டணம் ரூபா 1000, வங்கிக் கட்டணம் ரூபா 500
- வைப்பிலிட்ட ரூபா 4500 காசோலை இன்னும் வங்கிக்கூற்றில் பதிவு செய்யப்படவில்லை
- சுஹைருக்கு வழங்கிய காசோலை ரூபா 6800 இதுவரை வங்கியில் மாற்றப்படவில்லை

**வேண்டப்படுவது**
1. 2017.01.31 வங்கிக் கணக்கை சீராக்குக
2. 2017.01.31 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

07) i) அ) இலாப நோக்கற்ற அமைப்பொன்று வருமானம் பெற்றுக் கொள்ளும் இரு வழிகளை தருக?
ஆ) சியம்பலா விளையாட்டு கழகத்திலுள்ள அங்கத்தவர் எண்ணிக்கை 100 ஆகும். சந்தா கட்டணம் ரூபா 50 ஆகும்.
2016.12.31இல் இக்கழகத்தின் பெறுவனவு கொடுப்பனவு பின்வருமாறு

- விளையாட்டு விழாவுக்கு கிடைத்த நன்கொடைகள் ரூபா 62500
- விளையாட்டு விழா செலவுகள் ரூபா 45000
- எழுதுகருவி செலவுகள் ரூபா 12300
- விளையாட்டு கருவிகள் கொள்வனவு ரூபா 60000
- விளையாட்டு விழாவுக்கான உணவுச் செலவு ரூபா 18000
- போக்குவரத்து செலவு ரூபா 10000

மேலதிக தகவல்கள் :
01. உணவுச் செலவுகள் ரூபா 3000 இன்னும் செலுத்த வேண்டி உள்ளது.
02. 2016.01.01 இல் காணப்பட்ட விளையாட்டு கருவிகள் ரூபா 140000. விளையாட்டு கருவிகளுக்கு பெறுமானத் தேய்வு இடல் வேண்டும்.

**வேண்டப்படுவது** - 2016.12.31 இல் முடிவுற்ற வருடத்துக்கான வருமான செலவுக் கணக்கினை தருக.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

II) சிந்து வணிகத்தின் 2016.12.31 பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| மூலதனம் | | |
| சரக்கிருப்பு (01.01.2016) | 25,000 | |
| கொள்வனவு | 60,700 | |
| உட்சுமை கூலி | 6,200 | |
| விற்பனை | | 90,300 |
| மின்சாரம் | 18,000 | |
| சம்பளம் | 32,000 | |
| கொடுத்த கழிவு | 4,000 | |
| வங்கிககடன் வட்டி | 4,800 | |
| விநியோகவான் (கிரையம்) | 600,000 | |
| காணிகட்டிடம் (கிரையம்) | 800,000 | |
| வாடகை வருமானம் | | 3,000 |
| வங்கிக்கடன் | | 70,000 |
| கையிலுள்ள காசு | 12,300 | |
| வங்கியிலுள்ளள காசு | 32,200 | |
| கடன்பட்டோன் | 28,000 | |
| கடன்கொடுத்தோன் | | 22,000 |
| விளம்பரம் | 2,700 | |

மேலதிக தகவல்

01. 2016.12.31 இல் சரக்கிருப்பின் பெறுமதி ரூபா 30000
02. விநியோகவானுக்கு 5% உம் கட்டடங்களுக்கு 10% உம் பெறுமானத்தேய்வு இடப்படல் வேண்டும். (கட்டடங்களின் பெறுமதி ரூபா 300000 ஆகும்)
03. அறவிடமுடியா கடனாக ரூபா 1500 இனை பதிவழித்தல் வேண்டும்

வேண்டப்படுவது

01. 2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்று
02. 2016.12.31 இல் உள்ளவாறான நிதிநிலமை கூற்று

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk